ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date. 15.12.2025

கலாநிதி ஹர்ஷனா சூரியப்பெரும
திறைசேரி செயலாளர்
நிதி மேலாண்மை மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சு

**அனர்த்தினால் தபாதிக்கப்பட்ட மக்களினை வலுவூட்டல் நிகழ்ச்சிதிட்டம் தொடர்பாக**

2025/12/05 அன்று திடீர் புயலுடன் ஏற்பட்ட மோசமான காலநிலை காரணமாக ஏற்பட்ட அவசர பேரழிவு நிலைமைக்கமைவாக வெளியிடப்பட்ட வரவுசெலவு சுற்றறிக்கை இல. 08/2025 தொடர்புடையதாகும்.

இந்த சுற்றறிக்கையின் மூலம் சேதமடைந்த மக்களின் வாழ்கையை விரைவாக இயல்புநிலைக்கு கொண்டு வர பல துறைகளையும் நபர் குழுக்களையும் உள்ளடக்கி உதவிகள் வழங்கப்பட்டுள்ளமைக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணையம் தனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது. எனினும், இந்த சுற்றறிக்கையில் இயலாமையுடைய நபர்கள் தொடர்பான போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதை ஆணைக்குழு அவதானித்துள்ளது.

இயலாமையுடைய நபர்கள், சாதாரண நபர்களைவிட, தங்கள் இயலாமைக்கிணங்க சிறப்பு பிரச்சினைகளையும் சிரமங்களையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுவது தெளிவாகும். வீடுகள், சுகாதார வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்துவதிலும் அவர்கள் கூடுதல் செலவுகளைச் செய்ய வேண்டியிருப்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதனால், இந்த அம்சங்களுக்கு விசேஷ கவனம் செலுத்தி, இயலாமையுடைய நபர்கள் உள்ள குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் போது இதனை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதால், அதற்கமைய சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையை திருத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இந்த அறிவிப்பு, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்திற்கு அமைவாக வழங்கப்படுகின்றமையை கவனித்திற்கொள்ளவும்.

மேனகா ஹேரத்
செயலாளர் ( பதில் செயலாற்றுகின்ற)
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: අංක. 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / இல. 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு - 04. / No. 14, R.A. De Mel Mawatha, Colombo - 04.
සභාපති / தவிசாளர் / Chairman: 011-2505451
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2505541/74
ඊමේල් / மின்னஞ்சல் / e-mail: sechrcsl@gmail.com
දුරකථන / தொலைபேசி / Telephone: 94-11-2505580 / 81 / 82
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 1996
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk